**பிணையம் அளிக்கும் நபர்களுக்கானத் தகவல்**

**பிணையம் அளிக்கும் நபரின் பணி என்ன?**

தடுப்புக்காவலில் இருக்கும் ஒரு நபர் விடுதலை ஆணையின் அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றுகிறார் என்பதை உறுதி செய்யும் பொருட்டு ஒரு பிணையம் அளிக்கும் நபராக நீங்கள் பணத்தை வைப்புத் தொகையாக மற்றும்/அல்லது ஈட்டுத் தொகையாக அளிப்பீர்கள். தடுப்புக்காவலில் இருக்கும் நபருக்கு தங்குமிடத்தை அளிக்கவும் நீங்கள் பரிசீலனை செய்வீர்கள். அவ்வாறு நீங்கள் தங்குமிடத்தை அளிக்க முன்வரும் பட்சத்தில், பிற நிபந்தனைகளுடன் இது தடுப்புக்காவலுக்குப் பொருத்தமான மாற்றுவழியாக இருக்குமா என்பதை இவ்வழக்கை விசாரிக்கும் உறுப்பினர் முடிவு செய்வார். விடுதலை தொடர்பான அனைத்து நிபந்தனைகளுக்கும் அந்த நபர் இணங்கவில்லை எனில், கனடா பார்டர் சர்விஸ் ஏஜென்சி (CBSA) நீங்கள் வைப்புத் தொகையாக மற்றும்/அல்லது ஈட்டுத் தொகையாக அளித்த பணத்தை வைத்துக்கொள்ளக்கூடும். அந்த நபர் விடுதலை ஆணையின் விதிகளைப் பின்பற்றவில்லை என உங்களுக்குத் தெரியவரும் பட்சத்தில், ஒரு பிணையம் அளிக்கும் நபராக உங்கள் கடமைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அதை நீங்கள் உடனடியாக CBSA-வுக்குத் தெரிவிக்க வேண்டும்

**ஒரு நபரை பொருத்தமான பிணையம் அளிக்கும் நபராக ஆக்குவது எது?**

நீங்கள் பொருத்தமானவரா என்பதை உறுப்பினர் மதிப்பீடு செய்யும் பொருட்டு தடுப்புக்காவல் தொடர்பான திறனாய்வின் போது பிணையம் அளிக்கும் நபர்கள் சாட்சியம் அளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும். பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் சிலவற்றில் பின்வருபவை மட்டுமல்லாது பிற விஷயங்களும் உள்ளடங்கும்:

- ஒரு கனடா நாட்டுக் குடிமகனாக இருக்க வேண்டும் அல்லது கனடாவின் நிரந்தரக் குடியிருப்பாளராக இருக்க வேண்டும் (ஓர் உத்திரவாதமளிக்கும் பிணையத்தை நீங்கள் ஈடாக வைக்கும் பட்சத்தில்)
- குறைந்த பட்சம் 18 வயதுடையவராக இருக்க வேண்டும்
- கனடாவில் இருக்க வேண்டும் மற்றும் தற்போது கனடாவில் குடியிருக்க வேண்டும் (ஓர் உத்திரவாதமளிக்கும் பிணையத்தை நீங்கள் ஈடாக வைக்கும் பட்சத்தில்)
- தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபரை அறிந்திருக்க வேண்டும்
- உங்களுடைய சொந்த விருப்பத்தின் பேரில் இதற்கு முன்வர வேண்டும்



ID – 674bi (2016/07/11)
*Disponible en français*

- உங்களுடைய சொந்தப் பணத்தை பிணையமாக வைக்க விருப்பம் தெரிவிக்க வேண்டும்
- தடுப்புக்காவில் உள்ள நபரைக் மேற்பார்வையிட வேண்டும்

**எவ்வளவு பணம் தேவைப்படும்?**

எந்த ஒரு குறிப்பிட்ட தொகையும் தேவையில்லை; நீங்கள் செலுத்த வேண்டிய தொகை உங்கள் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும். இறுதித் தொகை வழக்கு விசாரணையின் போது உறுப்பினரால் தீர்மானிக்கப்படும். இரண்டு வகையான பிணையங்கள் உள்ளன: வைப்புத் தொகைகள் மற்றும் உத்திரவாதங்கள்.

**வைப்புத் தொகை என்றால் என்ன?**

இது பொதுவாக பிணையத் தொகை என அழைக்கப்படுகிறது. வழக்கு விசாரணையின் போது அப்பணம் எங்கிருந்து வருகிறது என உங்களிடம் கேட்கப்படும். அப்பணம் தடுப்புக்காவலில் உள்ள நபரின் பணமாக இருக்கக்கூடாது. அத்தொகையானது வைப்புத் தொகையாக செலுத்தப்படாத வரை தடுப்புக்காவலில் உள்ள நபர் விடுதலை செய்யப்படமாட்டார். வைப்புத் தொகையைச் செலுத்தும் முறைகள் CBSA ஆல் நிர்வகிக்கப்படுகின்றன.

**உத்திரவாதம் என்றால் என்ன?**

இது பொதுவாக உத்திரவாதமளிக்கும் பிணையம் என அழைக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட நபர் தனது விடுதலை ஆணையின் நிபந்தனைகளுக்கு மதிப்பு அளிக்காத பட்சத்தில் நீங்கள் ஈடாக வைத்திருக்கும் தொகையை நீங்கள் செலுத்த வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளது. உங்களுடைய கடமையைப் பூர்த்தி செய்யும் திறனை CBSA மதிப்பீடு செய்யும். உதாரணமாக நீங்கள் ஈடாக செலுத்துவதற்குத் தகுதியான தொகையானது, உங்களுடைய வீட்டு உடைமைக்கான அல்லது வருடாந்திர வருமானத்திற்கான ஆதாரம் போன்ற உங்களுடைய தற்போதைய சொத்துகளுக்கான ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரங்களைப் பொறுத்து அமையும். உங்களுக்கு ஏதேனும் வருமானமோ அல்லது சொத்துக்களோ இல்லாவிட்டால், ஓர் உத்திரவாதப் பிணையத்தை அளிக்க நீங்கள் தகுதி பெறாமல் போகக்கூடும்.

**ஒரு பிணையம் அளிக்கும் நபராக என்னுடைய பொறுப்புகள் எப்போது முடிவுக்கு வரும்?**

ஒவ்வொரு வழக்கும் வித்தியாசமானது ஆகும்; இதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட காலஅளவு என்று எதுவுமில்லை. <u>சம்பந்தப்பட்ட நபரின் குடியேற்றம் சார்ந்த விஷயங்கள் முடிவுக்கு வரும் வரை</u>, ஒரு பிணையம் அளிக்கும் நபராக அவரை மேற்பார்வை செய்யும் பொறுப்பு உங்களுக்கு இருக்கும். ஒரு நபரின் குடியேற்றம்



ID – 674bi (2016/07/11)
*Disponible en français*

சார்ந்த விஷயங்களுக்கு ஒரு சில வாரங்களே ஆகக்கூடும், ஆனால் இவை முடிவுக்கு வர பல வருடங்கள் ஆகக்கூடும். நீங்கள் மேற்பார்வையிடும் நபர் அவருடைய விடுதலை தொடர்பான அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றினால் மட்டுமே இறுதியில் உங்களுடைய பணம் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும். சம்பந்தப்பட்ட நபர் அவருடைய விடுதலை ஆணையின் ஏதேனும் ஒரு நிபந்தனையை மீறும்பட்சத்தில், நீங்கள் வைப்புத் தொகையாக மற்றும்/அல்லது ஈட்டுத்தொகையாக அளித்த பணத்தை இழந்து விடும் அபாயம் உள்ளது.

**ஒரு நிபந்தனையை மாற்ற வேண்டும் என்றாலோ அல்லது பிணையம் அளிக்கும் நபரின் பொறுப்பில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்றாலோ நான் என்ன செய்ய வேண்டும்?**

ஒரு நபரின் குடியேற்றம் சார்ந்த விஷயங்கள் முடிவுக்கு வரும் வரை நீங்கள் பிணையம் அளிக்கும் நபராக நீடித்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு புதிய பிணையம் அளிக்கும் நபரை முன்மொழிதல் போன்ற விதிவிலக்கான நிகழ்வுகளில், பிணையம் அளிக்கும் நபரின் பொறுப்பிலிருந்து நீங்கள் உறுப்பினரால் நீக்கப்படக்கூடும். நீங்கள் மேற்கொண்டு ஒரு பிணையம் அளிக்கும் நபராகச் செயல்பட விருப்பமின்றி இருக்கும் இதுபோன்ற விதிவிலக்கான நிகழ்வுகளில், நீங்கள் குடியேற்றப் பிரிவு பதிவகத்திற்கு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் உங்களுடைய விண்ணப்பத்தின் நகல்களை CBSA-வுக்கும், சம்பந்தப்பட்ட நபருக்கும் அனுப்ப வேண்டும். உங்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என எந்த வித உத்திரவாதமும் அளிக்கமுடியாது. சிலநேரங்களில் ஒரு புதிய வழக்கு விசாரணை தேவைப்படக்கூடும் அல்லது வழக்கு விசாரணை நடத்தப்படாமல் உங்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படலாம் அல்லது மறுக்கப்படலாம்.

**பிணையம் அளிக்கும்  நபர்களுக்கான கூடுதல் தகவல் ஆதாரங்கள்**

தடுப்புக்காவல் திறனாய்வுகள் குறித்த மேலும் அதிகத் தகவல்களுக்கு, தயவுசெய்து http://www.irb-cisr.gc.ca/Eng/detention/Pages/detention.aspx என்ற IRB இணையதளத்தில் கிடைக்கப்பெறும் தடுப்புக்காவல் திறனாய்வு வழக்கு விசாரணைகள் குறித்த சிறிய வெளியீடுகளைப் பார்க்கவும்.



ID – 674bi (2016/07/11)
*Disponible en français*